# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

| | | |
|---|---|---|
| பிரிவு | : | TNPSC Group II தேர்வு |
| பாடம் | : | பொதுத்தமிழ் (இலக்கியம்) |
| பகுதி | : | **சமயப் பொதுமை தொடர்பான செய்திகள்** |

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# சமயப் பொதுமை தொடர்பான செய்திகள்

## தாயுமானவர்

| | | |
|---|---|---|
| ஊர் | - | திருமறைக்காடு (நாகப்பட்டினம், வேதாரண்யம்) |
| பெற்றோர் | - | கேடிலியப்பர், கெசவல்லி அம்மையார் |
| மனைவி | - | மட்டுவார்குழலி |
| காலம் | - | 18 ஆம் நூற்றாண்டு |
| இயற்றிய நூல்கள் | - | தாயுமானவர் திருப்பாடல் திரட்டு - 1452 பாடல்கள் உள்ளன |

**சிறப்புகள்:**

- ❖ திருச்சியை ஆண்ட விஜய ரகுநாத சொக்கலிங்க நாயக்கரிடமும் அவர் மனைவி இராணி மீனாட்சி ஆட்சியிலும் கருவூல அலுவலராக இருந்தார்.
- ❖ திருச்சி தாயுமானவர் திருவருளால் பிறந்ததால் தாயுமானவர் என பெயர் சூட்டப்பட்டது.
- ❖ தாயுமானவர் நினைவு இல்லம் இராமநாதபுரம் இலட்சுமி புரத்தில் உள்ளது (இறந்தஇடம்).
- ❖ திருமூலர் மரபில் வந்த மௌனகுரு என்பவரின் ஆசியும், அருளும்பெற்று சிறந்து விளங்கினார்.
- ❖ “முத்தே பவளமே மொய்த்தபசும் பொற்சுடரே
  சித்தேஎன்னுள்ளத் தெளிவே பராபரமே” - தாயுமானவர் திருப்பாடல் திரட்டு.
- ❖ அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
  ஆராமிர்தே என்கண்ணேஅரிய வன - தாயுமானவர் திருப்பாடல் திரட்டு
- ❖ தமிழ்மொழியின் உபநிடதங்கள் தாயுமானவர் பாடல்கள்.
- ❖ எல்லாரும் இன்புற்றிருக்க நினைத்தவர் தாயுமானவர்.
- ❖ அன்பர் பணிசெய்ய ஆர்வம் கொண்டவர் தாயுமானவர்.
- ❖ அன்பைப் பெருக்கி எனதாருயிரைக் காக்கவந்த
  இன்பப் பெருக்கே இறையே பராபரமே - தாயுமானவர்

## இராமலிங்க அடிகளார்

| | | |
|---|---|---|
| ஊர் | - | மருதூர் சிதம்பரம் வட்டம் கடலூர் மாவட்டம் |
| பெற்றோர் | - | இராமையா, சின்னம்மையார் |
| காலம் | - | 05 - 10 - 1823 முதல் 30 - 01 - 1874 (51 வயது) |
| இயற்றிய நூல்கள் | - | ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறை கண்டவாசகம், வடிவுடை மாணிக்கமாலை,எழுத்தறியும் பெருமான் மாலை, |

| | | |
|---|---|---|
| | | தெய்வ மணிமாலை இவருடைய பாடல்கள் திருவருட்பா என தொகுக்கப்பட்டுள்ளது. |
| பதிப்பித்த நூல்கள் | - | சின்மய திபிகை, ஒழிவிலொடுக்கம், தொண்ட மண்டல சதகம் |
| சிறப்பு பெயர்கள் | - | திருவருட்பிரகாச வள்ளலார், ஓதாது உணர்ந்த பெருமான், வள்ளலார், புரட்சி துறவி, பசிப்பிணி மருத்துவர். |

**சிறப்புகள்:**

- உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் என்னும் பெரிய புராணப்பாடலை இராமலிங்க அடிகளார் 9 வயதில் பாடி சொற்பொழிவாற்றினார்.
- தில்லையில் இறைவழிபாட்டின் போது விழியசைக்காமல் இறைவனைப் பார்த்து சிரித்ததைக் கண்ட ஆலய அந்தணர் அக்குழந்தையை இறையருள் பெற்ற திருக்குழந்தை என்று பாராட்டினார்.
- 1865 ல் வடலூரில் சன்மார்க்க சங்கத்தையும், 1872 ல் ஞானசபையையும் - நிறுவியவர்.
- வடலூரில் சத்திய தருமசாலையை நிறுவியவர்.
- இவர் 5 வது குழந்தையாக பிறந்தவர்.
- வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடிய மணம் உடையவர் - இராமலிங்க அடிகள்.

  - "கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான் என்
    எண்ணில் கலந்தே இருக்கிறான்" **- இராமலிங்க அடிகளார்**

- திருவருட்பா 5818 பாடல்களையும், ஆறு திருமுறைகளையும் கொண்டுள்ளது.

  - மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
    வருத்தத்தை ஒருசிறி தெனினும் **- இராமலிங்க அடிகளார்**

  - "அகத்தே கறுத்து புறத்து வெளுத்து
    இருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்த" **- இராமலிங்க அடிகளார்**

- இராமலிங்க அடிகளாரின் ஆசிரியர் சபாபதி ஆவார்.
- திருவொற்றியூர்ச் சந்நிதி வீதியில் திண்ணையில் அமர்ந்திருந்த திகம்பர சாமியார் அவ்வழியல் செல்லும் மனிதர்களை அதோ மாடு போகிறது, ஆடு போகிறது, நரி போகிறது என்றவர்.
- சென்னை கந்தக் கோட்டத்தில் இறைவனை இராமலிங்க அடிகளார் மனமுருகி பாடிய பாடல்களின் தொகுப்பு தெய்வமணிமாலை ஆகும்.
- ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும் - தெய்வமணிமாலை சிவபெருமான் மீது பாடப்பட்டது ஆகும்.
- வடிவுடை மாணிக்கமாலை மற்றும் எழுத்தறியும் பெருமான் மாலை பாடலானது திருவொற்றியூர் சிவபெருமான் மீது பாடப்பட்டது ஆகும்.

- ❖ கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடி போக - இராமலிங்க அடிகளார்.
- ❖ ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுளர் ஆகிஉல கியல்நடத்தல் வேண்டும் - இராமலிங்க அடிகளார்.
- ❖ தாயுமானவரும், வள்ளலாரும் சமகாலத்தவர்கள்.
- ❖ சங்கடம் விளைவிக்கும் சாதியையும் மதத்தையும் தவிர்த்தேன் - இராமலிங்க அடிகளார்.
- ❖ பெண்ணினுள் ஆணும், ஆணினுள் பெண்ணும் அண்ணுற வகுத்த அருட்பெருஞ்சோதி - இராமலிங்க அடிகளார்.
- ❖ அருட்பெரும் ஜோதி தனிபெரும் கருணை - வள்ளலார்.
- ❖ “எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி உள்ளே
- ❖ வித்தகர்தம் அடிக்கு ஏவல்புரிந்திட என் சிந்தைமிக விளைந்த தாலோ - இராமலிங்க அடிகளார்.
- ❖ உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல் என்றவர் இராமலிங்க அடிகளார்.
- ❖ அப்பாநான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும். ஆருயிர்கட்கு எல்லாம் நான் அன்பு செயல் வேண்டும் - இராமலிங்க அடிகளார்.
- ❖ உறைமுடி வாள்கொண்டு ஒருவரை ஒருவர் உயிர் அறச் செய்தனர். எனவே தறையுறச் சிறயேன் கேட்டபோ தெல்லாம் தளர்ந்துஉளம் நடுங்கின்று அயர்ந்தேன் - இராமலிங்க அடிகளார்.
- ❖ திருவருட்பா ஆறு தொகுதிகளைக் கொண்டது.
- ❖ புதுநெறிகண்ட புலவர் என் - இராமலிங்க அடிகளாரை பாரதியார் போற்றியுள்ளார்.
- ❖ இறைவன் திருவருளை பெறுவதற்காக பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு திருவருட்பா.
- ❖ பிள்ளை பெரு விண்ணப்பம் பகுதி திருவருட்பாவில் இடம் பெற்றுள்ளது.

- வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
  நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
  தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்துஎன்
  ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே **- வள்ளலார்**

**வளரும் பிள்ளைகளுக்கு வள்ளலார் வழங்கிய அறிவுரைகள் பின்வருமாறு**

- தந்தை தாய் மொழியை தள்ளி நடக்காதே
- குருவை வணங்க கூசி நிற்காதே
- வெயிலுக்கு ஒதுங்கும் விருட்சம் அளிக்காதே
- மனமொத்த நட்புக்கு வஞ்சகம் செய்யாதே
- பொருளை இச்சித்துப் பொய் சொல்லாதே
- ஏழைகள் வயிறு எரியச் செய்யாதே
- பசித்தோர் முகத்தை பாராதிராதே
- இரப்போர்க்கு பிச்சை இல்லை என்னாதே
- தானம் கொடுப்போரை தடுத்து நிறுத்தாதே

**வள்ளலாரின் பன்முக ஆற்றல்கள்:**

சிறந்த சொற்பொழிவாளர், போதகாசிரியர், உரையாசிரியர், சித்த மருத்துவர், பசிப்பிணி நீக்கிய அருளாளர், பதிப்பாசிரியர், நூலாசிரியர், இதழாசிரியர், இறையன்பர், ஞானசிரியர், அருளாசிரியர்.

- "பெற்ற தாய்தனை மகமறந்தாலும்
  பிள்ளையைப்பெறுந் தாய்மறந்தாலும்
  உற்ற தேகத்தை உயிர்மறந்தாலும்
  உயிரை மேவிய உடல்மறந்தாலும் **- இராமலிங்க அடிகளார்**